**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 42** **நாள் : 18.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்படும் உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்ணுடன் கூடிய தாக்கீது ஒட்டப்பட்டு அப்புறப்படுத்தப்படும் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன உரிமையாளர்கள் உபயோகமற்ற, பழுதடைந்த வாகனங்களை சாலையோரங்கள், நடைபாதைகள் மற்றும் தெருக்கள் ஆகியவற்றில் நிறுத்தி வைத்துள்ளதை தொடர்ந்து, வாகனங்களின் உரிமையாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என ஏற்கனவே பலமுறை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவரை பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள், நடைபாதைகள் மற்றும் தெருக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அப்புறப்படுத்தப்படாத உபயோகமற்ற மற்றும் பழுதடைந்த 7,682 இருசக்கர வாகனங்கள், 90 மூன்று சக்கர வாகனங்கள், 103 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் 7,875 வாகனங்கள் பெருநகர சென்னை காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு, வட்டாரம் வாரியாக நிறுத்தி வைக்கப்பட்டது. இவ்வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை என காவல்துறை மூலம் சான்றுகள் பெறப்பட்டு, மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்பட்டது.

இந்த வாகனங்களின் அதிகபட்ச ஏலத்தொகை ரூ.2,21,45,006/–, இதில் சேவைக் கட்டணம் நீங்கலாக பெருநகர சென்னை மாநகராட்சி பெற்ற ஈட்டியத் தொகை ரூ.2,13,61,072/–யில் மாநகர காவல்துறைக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிக்காக 75 சதவீத பங்களிப்புத் தொகையாக ரூ.1,60,20,804/– வழங்கப்பட்டது.

தொடர்ந்து இப்பணியின் இரண்டாவது கட்டமாக 1,510 இருசக்கர வாகனங்கள், 51 மூன்று சக்கர வாகனங்கள், 13 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் இதுவரை கேட்பாரற்று இருந்த 1,574 வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டுள்ளது. விரைவில் இந்த வாகனங்களும் மின்னணு ஏலம் நடத்தி தீர்வு செய்யப்படும்.

மேலும், தற்பொழுது சாலையோரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்படும் பழுதடைந்த, உபயோகமற்ற வாகனங்கள் மீது மண்டலம் வாரியாக பெருநகர சென்னை மாநகராட்சி வரிசை எண்ணுடன் கூடிய தாக்கீது ஒட்டப்படும். உரிமை கோரப்படாத வாகனங்கள் 15 நாட்களுக்கு பின் அங்கிருந்து அகற்றப்பட்டு வட்டாரம் வாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் அவை நிறுத்தி வைக்கப்பட்டு காவல்துறையின் தடையில்லா சான்று பெறப்பட்டு ஏலம் விடப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**